- சுருக்கம்

கலையும் பண்பாடும் – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் – நலவாரிய உறுப்பினர்களின் ஓய்வூதியம் – ரூ.300/–லிருந்து ரூ.500/– ஆக உயர்த்தி வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சுற்றுலா மற்றும் பண்பாட்டு(பண்–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.27 நாள். 31.01.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042, தை–17

படிக்கவும்

1. அரசாணை (நிலை) எண்.70, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.2)த் துறை, நாள் 26.04.2007.
2. அரசாணை (நிலை) எண்.03, சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்.2)த் துறை, நாள் 07.1.2008.

மேலும் படிக்கவும்

3. கலைப் பண்பாட்டு ஆணையரின் கடித ந.க. எண்.219/ த.நா.க.ந.வா/2010, நாள் 06.1.2011.

*****

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் அமைக்கப்பட்டதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தின் உறுப்பினர்களுக்கு மாதம் ரூ.300/– ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

3. தமிழக அரசின் வேளாண்மைத் துறை சார்பில், 24.11.2010 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற வேளாண் கருத்தரங்கம் மற்றும் அலுவலர்கள் மாநாட்டில், "விவசாயத் தொழிலாளர்களின் ஓய்வூதியத்தை ரூ.500/- ஆக உயர்த்தப்படும் என்றும், இது விவசாயத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல; இதே பிரிவில் ஓய்வூதியமாக மாதம் பெற்று வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் இது அளிக்கப்படும்'' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

4. மேற்கண்ட அறிவிப்பின்படி, தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்) 2007, பிரிவு 17(3)–ன் கீழ் 60 வயது நிரம்பிய தகுதிவாய்ந்த நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர முதியோர் ஓய்வூதியத் தொகையினை டிசம்பர் 2010 முதல் ரூ.500/–ஆக உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுகிறது.

5. தமிழ்நாடு 1982–ம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள்(வேலை வாய்ப்பு முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) விவர அட்டவணையின் 67ம் இனத்தில் குறிப்பிடப்பட்ட நாட்டுப்புறக் கலை பணிகளில் வேலை வாய்ப்புகளுக்காக இயற்றப்பட்ட சட்டத்தின் பிரிவு 17(3)க்கான உரிய திருத்தம் தனியே வெளியிடப்படும்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.9/DS(KM)Edn.II/2011, நாள் 28.01.2011–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.க. ஜவஹர்,
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
கலை பண்பாட்டுத் துறை, சென்னை–28.
செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம்,
சென்னை – 28
உறுப்பினர் – செயலாளர்,
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், சென்னை – 28.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–9/35.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை 9/18.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:–
முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர், சென்னை –9
முதுநிலை நேர்முக உதவியாளர்,
நிதியமைச்சர் அலுவலகம், சென்னை –9
நிதி (கல்வி II) / வ.செ.பொ.II)த் துறை,
சென்னை –9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை –9.
சட்டத் துறை, சென்னை –9.
செயலரின் தனிச்செயலர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை,
சென்னை –9.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/2/2011

(மு. கி. புஷ்பலதா)
பிரிவு அலுவலர்
1-2-2011